Tamil Nadu State Board

2023

QUESTION PAPER

AGLASEM.COM

No. of Printed Pages : **8**

6688

பதிவு எண்
Register Number

Part III — Vocational Subjects

(Health Area)

செவிலியம் (தொழிற்கல்வி) / NURSING (VOCATIONAL)

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours] [Maximum Marks : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor, immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note: (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[திருப்புக / Turn over

schools.aglasem.com

aglasem.com

1. நீர் இழப்பிற்கான அறிகுறி :

(அ) உடல் எடை அதிகரிப்பு (ஆ) அதிக அளவு சிறுநீர் கழித்தல்

(இ) ஈரப்பதம் மிக்க வாய் (ஈ) சுருங்கிய கண்ணீரில்லா கண்கள்

The sign of dehydration is :

(a) Weight gain (b) Excess urination

(c) Moist Mouth (d) Sunken tearless eyes

2. கீழ்க்கண்டவைகளில் எது நோய் எதிர்ப்பு மண்டலத்தை பாதிக்கிறது ?

(அ) எச்.ஐ.வி (ஆ) காலரா (இ) மூளைக்காய்ச்சல் (ஈ) டெங்கு

Which of the following damages the immune system ?

(a) HIV (b) Cholera (c) Encephalitis (d) Dengue

3. சிலிகோஸிஸ் நோயின் மற்றொரு பெயர் :

(அ) பாட்லர்ஸ் ராட் (ஆ) நெஞ்சுவலி

(இ) மாரடைப்பு (ஈ) பித்தப்பை அழற்சி

Silicosis is otherwise called as :

(a) Pottor's rot (b) Anginapectoris

(c) Myocardial infarction (d) Cholecystitis

4. நீரில் கரையும் வைட்டமின்கள் :

(அ) வைட்டமின் K மற்றும் C (ஆ) வைட்டமின் A மற்றும் D

(இ) வைட்டமின் B மற்றும் A (ஈ) வைட்டமின் B தொகுதி மற்றும் C

Water soluble vitamins are :

(a) Vitamin K and C (b) Vitamin A and D

(c) Vitamin B and A (d) Vitamin B Complex and C

5. 38 -வது வாரத்தில் எலும்பு ஒருங்கிணைவு பகுதி முதல் கருப்பை உயரமானது :

(அ) 38 செ.மீ. (ஆ) 40 செ.மீ. (இ) 30 செ.மீ. (ஈ) 36 செ.மீ.

At 38 weeks, symphysis - fundal height should be about :

(a) 38 cm (b) 40 cm (c) 30 cm (d) 36 cm

schools.aglasem.com

aglasem.com

6. தட்டம்மை தடுப்பூசி _____ மாதத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

(அ) 6 -வது (ஆ) 3 -வது (இ) 9 -வது (ஈ) 4 -வது

Measles vaccine should be given at _____ month.

(a) 6^{th} (b) 3^{rd} (c) 9^{th} (d) 4^{th}

7. பால்வாடி ஊட்டச்சத்து திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு :

(அ) 1974 (ஆ) 1961 (இ) 1956 (ஈ) 1970

Balwadi Nutrition programme was started in :

(a) 1974 (b) 1961 (c) 1956 (d) 1970

8. _____ என்பது நோயாளி விபத்து அல்லது நோயிலிருந்து விடுபட்டு, மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பச் செய்யும் சிகிச்சையாகும்.

(அ) இரண்டாம்நிலை தடுப்பு (ஆ) புனர்வாழ்வு

(இ) மூன்றாம்நிலை தடுப்பு (ஈ) முதல்நிலை தடுப்பு

_____ is a treatment designed to facilitate the process of recovery from injury, illness or disease to normal condition.

(a) Secondary prevention (b) Rehabilitation

(c) Tertiary prevention (d) Primary prevention

9. கீழ்க்கண்டவற்றுள் எது இயற்கை பேரிடர் அல்ல ?

(அ) நிலச்சரிவு (ஆ) ஆழி பேரலை

(இ) இடி, மின்னல் (ஈ) காடு அழிப்பு

Which of the following is not a natural disaster ?

(a) Landslide (b) Tsunami

(c) Thunder and Lightning (d) Deforestation

10. _____ என்பவை வயிற்றில் கரையக்கூடிய, ஜெலாட்டின் பூசப்பட்டவைகள்.

(அ) டானிக்குகள் (ஆ) கேப்சூல் (இ) லோஷன் (ஈ) மாத்திரைகள்

_____ are coated with gelatin that gets dissolved in stomach.

(a) Syrup (b) Capsule (c) Lotion (d) Tablets

schools.aglasem.com
aglasem.com

11. பொருத்துக :

(1)	மருந்தகச் சட்டம்	(i)	1919
(2)	அபாயகர மருந்துச் சட்டம்	(ii)	1948
(3)	நச்சுப் பொருட்கள் சட்டம்	(iii)	1956
(4)	மருந்துசார் மற்றும் கழிவறை உருவாக்கச் சட்டம்	(iv)	1930

(அ) (1)-(i), (2)-(iv), (3)-(ii), (4)-(iii)

(ஆ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)

(இ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

(ஈ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

Match the following :

(1)	The Pharmacy Act	(i)	1919
(2)	Dangerous Drug Act	(ii)	1948
(3)	Poisons Act	(iii)	1956
(4)	Medicinal and Toilet Preparation Act	(iv)	1930

(a) (1)-(i), (2)-(iv), (3)-(ii), (4)-(iii)

(b) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)

(c) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

(d) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

12. 'தகவல் தொடர்பின் மிகப்பெரிய பிழை யாதெனில் நடந்து விட்டால் என்பதே' என்று கூறியவர் :

(அ) ஸ்டீபன் ஆர். கோவி (ஆ) ஜியார்ஜ் பெர்னார்ட் ஷா

(இ) பீட்டர் அஸ்டினோவ் (ஈ) கார்ல் ரோஜர்ஸ்

"The major mistake in communication is to believe that it happens", is said by :

(a) Stephen R. Covey (b) George Bernard Shaw

(c) Peter Ustinov (d) Carl Rogers

13. வழிகாட்டுதலின் குறிக்கோள் _____.

(அ) பொறுமையை வளர்த்துக் கொள்வது

(ஆ) உறவுமுறையை வளர்ப்பது

(இ) கோபத்தை வளர்த்தல்

(ஈ) தொடர்புகளை அதிகப்படுத்துவது

The objective of guidance is to _____.

(a) develop patience

(b) build relationship

(c) develop anger

(d) enhance communication

schools.aglasem.com

aglasem.com

14. யானைக்கால் நோயின் நோய் முற்றும் காலம் _____.

(அ) 2-7 நாட்கள் (ஆ) 10-14 நாட்கள்

(இ) 60 நாட்கள் (ஈ) சில மணி நேரம்

Incubation Period of Filariasis is _____.

(a) 2-7 days (b) 10-14 days

(c) 60 days (d) few hours

15. வைட்டமின் B_1 குறைவினால் ஏற்படும் நோய் :

(அ) கிளாசைடிஸ் (ஆ) பெல்லாக்ரா

(இ) மாலைக்கண் நோய் (ஈ) பெரி - பெரி

Deficiency disorder of Vitamin B_1 is :

(a) Glossitis (b) Pellagra

(c) Night blindness (d) Beri-Beri

பகுதி - II / PART - II

குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். அதில் வினா எண் **28** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

Note : Answer **any 10** questions. Question No. **28** is **compulsory.**

16. ORS -ல் அடங்கியுள்ள பொருட்களை பட்டியலிட்டு அதன் தயாரிப்பு பற்றி விளக்குக.

List down the contents of ORS and explain the preparation of ORS.

17. மூளைக்காய்ச்சல் என்றால் என்ன ?

What is meant by encephalitis ?

18. நாள்பட்ட மூச்சுக்குழல் அடைப்பு நோய்க்கான பரிசோதனைகள் யாவை ?

What are the investigations for Chronic Obstructive Pulmonary Disease ?

19. தாது உப்புகளின் குறைப்பாட்டால் ஏற்படும் நோய்களைப் பட்டியலிடுக.

List down the diseases caused by deficiency of Minerals.

schools.aglasem.com
aglasem.com

20. கருத்தரித்தல் – வரையறுக்கவும்.

Define Fertilization.

21. பிறந்த குழந்தை பராமரிப்பின் நோக்கங்கள் யாவை ?

What are the objectives of neonatal care ?

22. மூப்பியல் என்றால் என்ன ?

What is meant by Gerontology ?

23. பேரிடர் மேலாண்மையில் சிவப்பு, மஞ்சள், பச்சை மற்றும் கருப்பு வண்ண குறியீடுகளின் நிலைமை பற்றி எழுதுக.

Write the condition of red, yellow, green and black colour tag in disaster management.

24. மருந்து ஆணை என்றால் என்ன ?

What is meant by prescription ?

25. தகவல் தொடர்பு – வரையறுக்கவும்.

Define Communication.

26. ஆலோசனை வழங்குபவரின் பண்புகளில் ஏதேனும் மூன்றினை பட்டியலிடுக.

Enlist any three attributes of a Counselor.

27. நிமோனியாவின் சிக்கல்களை எழுதுக.

Write the complications of Pneumonia.

28. கரு வளர்ச்சியின் மூன்று பகுதிகளைக் குறிப்பிடுக.

Mention the three periods of Foetal development.

schools.aglasem.com

aglasem.com

பகுதி - III / PART - III

குறிப்பு : எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **35** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

Note : Answer **any 5** questions. Question No. **35** is **compulsory**.

29. காலராவின் தடுப்பு முறைகளை எழுதுக.

Write the preventive measures of Cholera.

30. இரத்த சோகையின் வகைகளை விளக்குக.

Explain the types of anaemia.

31. நீரிழிவு நோயாளிகளுக்கு எந்த வகை உணவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன ?

What kind of foods are recommended to the patient with Diabetes Mellitus ?

32. ஆம்னியாடிக் திரவத்தின் செயல்கள் யாவை ?

What are the functions of Amniotic Fluid ?

33. குழந்தைப்பருவத்தின் வளர்ச்சி நிலைகளை குறிப்பிடுக.

Mention the growth periods of Childhood.

34. பேரிடர் அவசரப் பெட்டி பற்றி குறிப்பு எழுதுக.

Write brief note on Disaster Emergency Kit.

35. சரியான முறையில் மருந்துகளை அளித்தல் பற்றி விளக்குக.

Explain about the rights of drug administration.

schools.aglasem.com
aglasem.com

பகுதி - IV / PART - IV

குறிப்பு : கீழ்கண்ட வினாக்களுக்கு **விரிவான** விடையளிக்கவும். **2x10=20**

Note : Answer the questions given below in **detail**.

36. (அ) எய்ட்ஸ் பற்றி விரிவாக எழுதவும்.

அல்லது

(ஆ) நீரில் கரையக்கூடிய வைட்டமின்களின் உணவு ஆதாரங்கள், தினசரி தேவைகள், செயல்பாடுகள் மற்றும் குறைபாட்டு நோய்கள் பற்றி விரிவாக எழுதுக.

(a) Write in detail about AIDS.

OR

(b) Write in detail about water soluble vitamins in terms of sources, daily requirements, functions and deficiency disorders.

37. (அ) குழந்தைகளிடையே காணப்படும் நடத்தைப் பிரச்சனைகள் பற்றி விவரிக்கவும்.

அல்லது

(ஆ) செயல்களுக்கேற்ப மருந்துகளின் வகைகளில் ஏதேனும் பத்து வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(a) Explain about the behavioural problems of children.

OR

(b) Explain any ten classification of drugs based on action with examples.

- o O o -

schools.aglasem.com

aglasem.com